(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1(9).]

# பாராளுமன்றத்தின்
# 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்
## 2025 பெப்ரவரி 11, செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது

## 2025 மார்ச் 07, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

154/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னாரில் நிறுவப்பட்டுள்ள "தம்பபவனீ" காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி மின்னுற்பத்தி நிலையத்தின் கொள்ளளவு (Installed Capacity) யாதென்பதையும்;

(iv) மேற்படி மின்னுற்பத்தி நிலையத்தில் மின்சார அலகு ஒன்றை உற்பத்தி செய்வதற்காகச் செலவிடப்படும் பணத்தொகை யாதென்பதையும்;

(v) 2021 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டுவரை மேற்படி மின்னுற்பத்தி நிலையம் மூலமாக தேசிய மின் கட்டமைப்புக்குச் சேர்க்கப்பட்டுள்ள வலு சக்தியின் அளவு ஒவ்வோர் ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மின்னுற்பத்தி நிலையம் காரணமாக இடம்பெயரும் பறவைகளுக்கு ஏற்படும் பாதிப்புக்களைத் தடுப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) அந்த நடவடிக்கைள் எவ்வாறு வெற்றியளித்துள்ளன என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மன்னார் தீவில் மேலும் காற்றாளை மின்னுற்பத்தி நிலையங்களை நிர்மாணிப்பதற்கான சாத்தியம் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி காற்றாலை மின்னுற்பத்தி நிலையங்களின் கொள்ளளவு யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

253/2024

கௌரவ ரவீந்திர பண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹப்புத்தளை மற்றும் ஹல்தமுல்லை பிதேச செயலகப் பிரிவுகளில் உள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளின் அளவு ஹெக்டயார்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) அக்காணி அளவு ஒவ்வோர் கிராம அலுவலர் பிரிவின் பிரகாரம் ஹெக்டயார் அளவில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி காணிகளில் இரண்டாம் தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு ஹெக்டயார்களில் எவ்வளவு என்பதையும்;

(iv) அவ்வொவ்வோர் இரண்டாம் தரப்பினரதும் பெயர், அத்தரப்பினருக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ள இடம் மற்றும் வழங்கப்பட்டுள்ள அடிப்படை என்பவை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச செயலகப் பிரிவுகளில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமற்ற அரச காணிகள் அமைந்துள்ள இடங்கள் மற்றும் அளவுகள் ஹெக்டயார்களில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலகப் பிரிவுகளில் இதுவரையில் இனங்காணப்பட்டுள்ள விவசாயக் காணிகளின் அளவு ஹெக்டயார்களில் எவ்வளவு என்பதையும்;

(iii) அக்காணிகளுள் இன்றளவில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள காணிகளின் அளவு ஹெக்டயார்களில் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

292/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இலங்கையில் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக புத்தளம் ஆதார வைத்தியசாலையின் நோயாளர் தங்கும் விடுதிகள், வெளிநோயாளர் பிரிவுகள், சிகிச்சைப் பிரிவுகள் உள்ளிட்ட வைத்தியசாலை வளாகம் வெள்ளத்தால் மூழ்கியதென்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் கழிவு நீரை வெளியேற்றவும், மழைநீர் வழிந்தோடவும் வடிகான் தொகுதி இல்லையென்பதையும்;

(iii) நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்கும் வைத்தியசாலை வளாகங்கள் மிகவும் பாதுகாப்பாக பராமரிக்கப்படல் வேண்டுமென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி வைத்தியசாலை வளாகத்தை மிகவும் பாதுகாப்பாக பராமரிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

304/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை இலங்கைத் துறைமுக அதிகாரசபை மற்றும் தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமான ஒவ்வொரு முனையத்திற்கும் வந்தடைந்த கப்பல்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அதே காலப்பகுதியில் அந்த முனையங்கள் ஒவ்வொன்றினாலும் கையாளப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அதே காலப்பகுதிக்கான அத்தகைய முனையங்கள் ஒவ்வொன்றினதும் தொழிற்பாட்டு இலாபம் எவ்வளவு என்பதையும்;

(iv) அதே காலப்பகுதியில் அதிகாரசபையால் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் இலாபம் எவ்வளவு என்பதையும்;

(v) மேலே இல. (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள முனையங்களின் வினைத்திறன், அத்தகைய ஒவ்வொரு முனையங்களாலும் ஒரு மணி நேரத்திற்குக் கையாளப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கையின் மூலம் எவ்வளவு என்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரை இலங்கையில் கையாளப்பட்ட கொள்கலன்கள் மற்றும் பொதுச் சரக்குகளின் மொத்த எண்ணிக்கை (தொன்களில்) யாதென்பதையும்;

(ii) அடுத்த பத்து ஆண்டுகளில் கையாள்வதற்கு எதிர்பார்க்கப்படும் கொள்கலன்கள் மற்றும் பொதுச் சரக்குகளின் எண்ணிக்கை (தொன்களில்) யாதென்பதையும்;

(iii) கடந்த 5 ஆண்டுகளில் கொள்கலன் கையாளுதலில் இலங்கையின் உலகத் தரவரிசை யாதென்பதையும்;

வெவ்வேறாக அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

492/2025

கௌரவ தேவாநந்த சுரவீர,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள பதிவுசெய்யப்பட்ட மருந்தகங்கள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட மருந்தாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தின்படி, பதிவுசெய்யப்பட்ட மருந்தாளர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட மருந்தகங்கள் கொண்டு நடத்தப்பட வேண்டுமா என்பதையும்;

(iii) பதிவுசெய்யப்பட்ட மருந்தகங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில், பதிவுசெய்யப்பட்ட மருந்தாளர்களின் பற்றாக்குறை காணப்படுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்தப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்வதற்காக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிவாரி மருந்தாளர் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக மருத்துவ சபையில் பதிவுசெய்வதற்கு க.பொ.த (உ/த) பரீட்சையில் இரசாயனவியல் பாடத்தில் திறமைச் சித்தியைப் பெற்றிருக்க வேண்டியதை அறிவாரா என்பதையும்;

(ii) இறுதியாக நடாத்தப்பட்ட வெளிவாரி மருந்தாளர் பரீட்சைக்கு தோற்றிய சுமார் 1700 விண்ணப்பதாரர்களில் 99 விண்ணப்பதாரர்கள் மாத்திரமே சித்தியடைந்துள்ளனர் என்பதோடு அவ்வெண்ணிக்கையானது பரீட்சைக்குத் தோற்றிய மொத்த விண்ணப்பதாரர்களில் வெறுமனே 6% இலும் குறைவான விகிதமாக உள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2025 மார்ச் 08, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

259/2024

கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2022 ஆம் ஆண்டு முதல் 2024 வரையிலான காலப்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ஹ பங்கேற்றுள்ள உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டு விஜயமும் மேற்கொள்ளப்பட்டுள்ள நாடு, நோக்கம், இலங்கைக்கு கிடைத்த நன்மைகள், முன்னாள் ஜனாதிபதிக்கு மேலதிகமாக அரசாங்க செலவில் பங்கேற்றுள்ள நபர்கள் மற்றும் அவர்களை இணைத்துக் கொண்டதன் நோக்கம் ஆகியன வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி வெளிநாட்டு விஜயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள மொத்த செலவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

274/2024

கௌரவ எஸ்.எம் மரிக்கார்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பதலே தொடக்கம் கிராண்ட்பாஸ் வரையான வீதியை (பழைய வீதி) அபிவிருத்தி செய்வதற்கு வேலைத்திட்டமொன்று முன்மொழியப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) அந்த வீதியை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான நிதி எவ்வாறு பெற்றுக்கொள்ளப்படுமென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

381/2025

கௌரவ ரோஹித்த அபேகுணவர்தன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாணத்திற்கமைவாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அத்தகைய ஒவ்வொரு பாடசாலையிலும் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை, ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் கல்வி சாரா பணியாட்டொகுதி ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இலங்கையிலுள்ள மாகாண சபைப் பாடசாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாணத்திற்கமைவாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) அத்தகைய ஒவ்வொரு பாடசாலையிலும் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை, ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் கல்வி சாரா பணியாட்டொகுதி ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) கடந்த அரசாங்கத்தினால் தேசிய பாடசாலைகளாக மாற்றப்பட்டுள்ள மாகாண சபைப் பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) அத்தகைய பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

428/2025

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தின், மூதூர் மற்றும் கிண்ணியா வைத்தியசாலைகளுக்கு ‘ஏ’ தரம் வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இருப்பினும், ‘ஏ’ தரத்திற்கு ஏற்றவாறு பௌதீக வளங்கள் இற்றைவரையில் இவ்வைத்தியசாலைகளுக்குப் வழங்கப்படவில்லை என்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலைகளுக்கு போதிய ஆளணி வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலைகளுக்குத் தேவையான பௌதீக வளங்களை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையிலும் தற்போது கடமையாற்றிவரும் மருத்துவ நிபுணர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை;

(iii) மேற்படி வைத்தியசாலைகளின் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iv) கிண்ணியா மற்றும் மூதூர் வைத்தியசாலைகளை மத்திய அரசின் கீழ் கொண்டுவராமைக்கான காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

444/2025

கௌரவ சானக மாதுகொட,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புல்மோட்டை, இலங்கை கனிய மணல் கம்பனிக்கு 2024.07.01 ஆந் திகதி முதல் தற்காலிக அடிப்படையில் தொழிலாளர்களாக சேர்த்துக்கொள்ளப்பட்ட ஊழியர்களுக்கு இதுவரை எவ்வித வேதனமோ, கொடுப்பனவோ செலுத்தப்படவில்லையென்பதை அறிவாரா;

(ii) மேற்படி ஊழியர்களுக்கு வேதனம்/கொடுப்பனவு செலுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(iii) இவ்வூழியர்களுக்கு வேதனத்தை செலுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iv) இவர்களது தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 மார்ச் 10, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

419/2025

கௌரவ அருண பனாகொட,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதற்காக காணி கொள்ளல் மேற்கொள்ளப்பட்ட போதும் அவற்றுக்கு நட்டஈடு செலுத்தப்பட்ட போதும் கடந்த அரசாங்கம் மேற்கொண்ட ஒரு சில தீர்மானங்கள் காரணமாக பாரிய சிக்கல் நிலை தோன்றியுள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சிக்கலைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

435/2025

கௌரவ தினிந்து சமன்,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரை இலங்கை மின்சார சபையினால் அமுலாக்கப்பட்ட விசேட கருத்திட்டங்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) அக் கருத்திட்டங்களில் பதுளை மாவட்டத்தில் அமுலாக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை எத்தனை;

(iii) அவ் ஒவ்வொரு கருத்திட்டத்திற்குமான கோரிக்கையை முன்வைத்த தரப்பினர், அனுமதி வழங்கப்பட்டபோது கருத்திற்கொள்ளப்பட்ட பிரத்தியேக காரணிகள் மற்றும் செலவிடப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

451/2025

கௌரவ பத்மசிறி பண்டார,— பிரதம அமைச்சரும், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க ஆசிரியர்களின் ஒழுக்காற்று நடவடிக்கைகளைச் சாராத இடமாற்றங்கள், தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கைக்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்றன என்பதை அறிவாரா;

(ii) கடந்த காலப்பகுதியில் ஆசிரியர் இடமாற்றக் கொள்கையானது உரிய முறையில் இடம்பெறவில்லை என்பதை அறிவாரா;

(iii) ஆமெனில், இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான நடவடிக்கைகள் யாவை;

(iv) கடந்த காலப்பகுதியில் அரச பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதிக்கும் போது பாரிய அளவிலான ஊழல்கள், மோசடிகள் மற்றும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்பதை அறிவாரா;

(v) இவற்றைத் தவிர்ப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படும் நடைமுறை சாத்தியமான வேலைத்திட்டம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கல்வி நிர்வாக சேவை, கல்வியியலாளர் சேவை மற்றும் அதிபர் சேவையில் வெற்றிடங்கள் பெருமளவில் நிலவுகின்றன என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு சேவையிலும் இன்றளவில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது;

(iii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

501/2025

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தின், ஹினிதும தேர்தல் தொகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட i-road கருத்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டதால், அப்பகுதி மக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியிருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு வீதி தொடர்பிலும் எழுந்துள்ள பிரச்சினைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) அது தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டிய நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iv) அந்த ஒவ்வொரு வீதிக்குமாக மதிப்பிடப்பட்ட தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) அந்த வீதிகளை போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வகையில் பராமரிப்பதற்கு மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

503/2025

கௌரவ நிஷாந்த பெரேரா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தின், பெந்தர மற்றும் எல்பிட்டிய ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள, காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளின் ஹெக்டெயார் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) அக் காணிகளின் அளவு, குறித்த பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) அக் காணிகளில் கைத்தொழில்கள் மற்றும் ஏனைய கருத்திட்டங்களுக்காக வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு யாதென்பதையும்;

(iv) மேற்படி பிரதேச செயலகப் பிரிவுகளில், காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் தனிநபர்களுக்கு வழங்கப்பட்டிருப்பின், அவ்வாட்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 மார்ச் 11, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

9/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையின் கோழி இறைச்சி உற்பத்தியானது ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் கோழி இறைச்சி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த அளவு ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி காலப்பகுதியில் கோழி இறைச்சி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த அளவு ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(vi) இலங்கையில் கோழி இறைச்சி தொழில்துறையை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

462/2025

கௌரவ ருவன் மாபலகம,— இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அத்தனகல்ல, வதுபிட்டிவல விளையாட்டுக் கட்டிடத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி, பணிகள் நிறைவு செய்யப்பட்ட திகதி மற்றும் அது திறந்து வைக்கப்பட்ட திகதி என்பன வெவ்வேறாக யாவை;

(ii) மேற்படி விளையாட்டுக் கட்டிடத் தொகுதியில் நீச்சல் தடாகம், உள்ளக கரப்பந்தாட்ட விளையாட்டரங்கு, பிரதான விளையாட்டரங்கு, உடற் பயிற்சி நிலையம் மற்றும் ஓட்டப்பாதை ஆகியவற்றை நிர்மாணித்த அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்கள் வெவ்வேறாக யாவை;

(iii) நிர்மாணப் பணிகளுக்காக இதுவரையில் செலுத்தப்பட்டுள்ள மற்றும் செலுத்த வேண்டியுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறித்த விளையாட்டுக் கட்டிடத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் உரிய தரநியமங்களுக்கமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா என பரிசோதனை செய்யப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், பரிசோதனை செய்யப்பட்ட திகதி மற்றும் யாரால் பரிசோதனை செய்யப்பட்டது;

(iii) நிர்மாணப் பணிகளில் இடம்பெற்றுள்ள குறைபாடுகள் தொடர்பாக மேற்படி நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட நிறுவனங்கள் பொறுப்பேற்கின்றனவா;

(iv) இன்றேல், அதற்கான காரணம் யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

482/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் அரபுக் கல்லூரிகள் பதிவு செய்யப்பட்டு பராமரிக்கப்படுகின்றன என்பதையும்;

(ii) மௌலவிச் சான்றிதழை வழங்குவதற்காக மேற்படி ஒவ்வொரு அரபுக் கல்லூரிகளும் வெவ்வேறாக பரீட்சைகளை நடாத்துகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மௌலவிச் சான்றிதழை வழங்கும் பொருட்டு அரசாங்கத்தினால் பொதுப் பரீட்சையொன்றினை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

486/2025

கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கெஸ்பேவ பிரதேச செயலகப் பிரிவில், கஹபொலவில் அமைந்துள்ள 'ரெஜிடேல் வத்தை' எனும் காணியானது தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் கீழ் உள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி காணியின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி காணியில் இன்றளவில் தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி காணி தொடர்பாக ஏதேனும் எதிர்கால வேலைத்திட்டம் உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

509/2025

கௌரவ உபுல் கித்சிறி,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தை அண்மித்ததாக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வளவை கங்கைக்குக் குறுக்காக லியன்கஸ்தொட்ட பாலம் நிர்மாணிக்கப் பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி பாலத்தின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் நிறைவுசெய்யப்படவிருந்த திகதி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி பாலத்திற்கான மதிப்பீட்டுப் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iv) அப்போது குறித்த பாலத்தை நிர்மாணிப்பதற்குப் பொறுப்பாக செயற்பட்ட அமைச்சு/நிறுவனம் யாது என்பதையும்;

(v) பாலம் நிர்மாணிக்கப்பட்ட காலப்பகுதியில் குறித்த அமைச்சுக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர் யாரென்பதையும்;

(vi) இன்றளவில் மேற்படி பாலத்தின் நிர்மாணப்பணிகள் நிறைவடைந்துள்ளனவா என்பதையும்;

(vii) மேற்படி பாலத்தின் நிர்மாணப்பணிகள் இடைநிறுத்தப்பட்டிருப்பின், அதன் காரணமாக நாசமடைந்துள்ள பொருட்கள் யாவை என்பதையும்;

(viii) அவற்றின் பெறுமதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 மார்ச் 12, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

74/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில், போரதீவுபற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரித்தான பளுகாமம் பிரதேசத்தில் அமைந்துள்ள தபால் அலுவலகத்திற்கு நிரந்தரக் கட்டிடமொன்று இல்லையென்பதுடன் மேற்படி தபால் அலுவலகம் தற்காலிக கட்டிடமொன்றில் பேணிவரப்படுகின்றது என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி தபால் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடமொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) அக்கட்டிடம் நிர்மாணிக்கப்படும் காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

92/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைச் சந்தையில் தற்போது தேங்காய்த் தட்டுப்பாடு நிலவுவதை அறிவாரா என்பதையும்;

(ii) வட மாகாணத்தை மையமாக கொண்டு அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தென்னை முக்கோணத்தினூடாக இலங்கையின் தெங்கு உற்பத்திக்கு கிடைத்துள்ள பங்களிப்பு யாதென்பதையும்;

(iii) இலங்கையில் வருடாந்த தேங்காய் நுகர்வு யாதென்பதையும்;

(iv) தேங்காய்த் தட்டுப்பாட்டைக் குறைக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

125/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட சிறைச்சாலை காவலாளிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) தற்போது மேற்படி திணைக்களத்தில் சேவையாற்றி வருகின்ற சிறைச்சாலை காவலாளிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி பதவியில் தற்போது காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கை யாது என்பதையும்;

(v) சிறைச்சாலை காவலாளிகளின் தொழில்சார் சிக்கல்களை தீர்த்துவைப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

210/2024

கௌரவ ரோஹண பண்டார,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றுவரை இனங்காணப்பட்டுள்ள தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிவாய்ந்த இடங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவ் இடங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அவ் இடங்களில் உள்ள தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிவாய்ந்த பொருட்களைப் பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

392/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக்க,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாண சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள புதிய மாகாண இறைவரி ஆணையாளர் நியமிக்கப்பட்ட செயன்முறை யாதென்பதையும்;

(ii) மாகாண இறைவரி ஆணையாளர் பதவிக்கான தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) புதிய மாகாண இறைவரி ஆணையாளரை நியமிப்பதற்கு முன்னர் பணியாற்றிய மாகாண இறைவரி ஆணையாளர், உள்நாட்டு இறைவரி உத்தியோகத்தர் சேவையைச் சேர்ந்தவரா என்பதையும்;

(iv) மாகாண இறைவரி ஆணையாளர் உள்நாட்டு இறைவரி சேவையிலிருந்தா, மாகாண இறைவரி சேவையிலிருந்தா அல்லது கணக்காளர் சேவையிலிருந்தா நியமிக்கப்படுகின்றனர் என்பதையும்;

(v) ஊவா மாகாணத்துக்கு நியமிக்கப்பட்டுள்ள புதிய மாகாண இறைவரி ஆணையாளர், இதற்கு முன்னர் ஊவா மாகாணத்தின் மாகாண இறைவரி ஆணையாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டு, அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டவரா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ள அடிப்படை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?